

PORIYIYAL KADHIR

தனி பிரதி
ரூ.10/-



# பொறியியல் கதிர்

கதிர் 48 | பாரிப்பு 4 | திருவள்ளுவர் ஆண்டு 2047 | டிசம்பர் 2016

## கண்ணீர் அஞ்சலி

**24.02.1948**



**05.12.2016**

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மறைவிற்கு
தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org email id : tneapwd@yahoo.co.in

# கோவை - பொள்ளாச்சி கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுக்கும் காட்சி



பொதுச் செயலாளர் மடல்

மடல் - 4 (2016 - 2017)



# தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மறைவிற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது. ஆறு முறை தமிழக முதல்வராக பொறுப்பேற்று ஏழை, எளிய மக்களின் நலனுக்காக உழைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரார்த்திக்கிறது.

இளநிலைப் பொறியாளர் / உதவிப்பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancy) கருத்துரு அரசுக்கு அனுப்ப முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. திருமாறன் மற்றும் அதற்கு பிறகு கூடுதல் பொறுப்பு வகித்த தலைமைப் பொறியாளரிடமும் வலியுறுத்தி வந்தோம்.

முன்னாள் தலைமைப் பொறியாளர் (பொது) கூடுதல் பொறுப்பு அவர்கள் விரைந்து உதவி செயற்பொறியாளர் காலிப்பணியிட மதிப்பீடு கருத்துரு அனுப்பப்படும் என்று தெரிவித்தார். 25.11.2016 அன்று கூடுதல் பொறுப்பு தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை சந்தித்து கேட்ட பொழுது விரைவில் கருத்துரு அரசுக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார். அதன்படி உதவி செயற்பொறியாளர் காலிப்பணியிட மதிப்பீடு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அரசு ஆணை எண் 1 சம்பந்தமாக நமது சகோதர சங்கம் புதிதாக ஒரு வழக்கு உயர்நீதி மன்றத்தில் தொடுத்துள்ளது. அந்த வழக்கில் பிரதிவாதியாக

இணைய (implead) ஏற்பாடுகள் முடிந்துள்ளது. அடுத்த வாரத்தில் வழக்கில் பிரதிவாதியாக இணைந்து விடுவோம்.

பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க அரசிடம் கேட்ட விவரங்கள் வந்து சேர்ந்த பிறகும், தலைமைப் பொறியாளர் (பொது) கூடுதல் பொறுப்பு அவர்கள் அறிவுறுத்திய பிறகும் கோப்பு தயார் செய்ய வேண்டிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். ஏற்கெனவே தவறான முதுநிலையில் வைத்து பதவி உயர்வு அளித்து பிறகு ரத்து செய்யப்பட்டது. இந்த விஷயம் நமது கவனத்திற்கு வந்த பிறகு விதிகளின்படி சரியான முதுநிலையில் வைத்து தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று சங்கத்தின் சார்பாக வலியுறுத்தி இருக்கிறோம். தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களும் நமது கோரிக்கையை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கிய பிறகும், கீழேயுள்ள அதிகாரிகள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**

**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

# 06.11.2016 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 06.11.2016 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் இல்லம் பொறியாளர் சி.ப. சண்முகம் அரங்கில் மாநிலத்தலைவர் பொறியாளர் எஸ். பாஸ்கரன் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினர். பொதுச்செயலாளர் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார்.

50 ஆண்டு கால பாரம்பரியமிக்க பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம் நேரில் சந்தித்தும், கடிதம் மூலமும் வலியுறுத்திய விஷயங்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட்டது.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

சென்னை லால்முகமது தெருவில் அமைந்துள்ள பொறியியல் இல்லத்தை புதுப்பிப்பது சம்பந்தமாக கோவை - பொள்ளாச்சி கிளையின் தலைவர் திரு. இராஜன் பிரேம்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட வேலையை செய்பவர்களையும் வரவழைத்து ஆலோசிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்த பிறகு கோவிலம்பாக்கத்தில் (சுண்ணாம்பு குளத்தூர்) உள்ள சங்கத்திற்கு சொந்தமான இடத்தை மையச்சங்க பொறுப்பாளர்கள் சென்று பார்வையிட்டார்கள். புதர் மண்டி கிடப்பதை சுத்தப்படுத்துவது, மீண்டும் மீதமுள்ள இரண்டு பக்கங்களில் கம்பி வேலி (Fencing) பழுதடைந்து உள்ளதால் அந்த இரண்டு பக்கமும் சுற்றுச்சுவர் (Compound Wall) அமைப்பது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டது. இரண்டு பக்கங்களுக்கு ஏற்கெனவே சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

**தீர்மானங்கள்:-**

1. உச்சநீதிமன்றத்தில் அரசு ஆணை எண் 66 சம்பந்தமான வழக்கில் (திருமால் வழக்கின் சாரம்) தனி நபர்கள் 7 பேர் சங்கத்தின் மேற்பார்வையில் வழக்கு தொடுத்திருந்தனர். மேற்கொண்டு இந்த வழக்கில் தங்களால் செலவு செய்ய முடியாது. செலவினத்தை சங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை ஏற்று அந்த வழக்கில் 7 பேர் சார்பாக ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கான செலவினத்தை இனிவரும் காலங்களில் சங்கம் ஏற்றுக் கொள்வது என தீர்மானிக்கப்படுகிறது.

2. உயர்நீதிமன்றத்தில் அரசு ஆணை எண்1 சம்பந்தமாக நமது சகோதர சங்கம் புதிதாக தொடுத்துள்ள வழக்கில் பிரதிவாதியாக (implead) இணைவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

3. பாரம்பரியம் மிக்க பொதுப்பணித்துறை ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றும், வரைவாளர் பதவி பெற்றதும் அவர்கள் வரைவாளர் சங்கத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலையை கருத்தில் கொண்டும் 2017 ஆம் ஆண்டு முதல் பணி ஆய்வாளர்களிடம் சந்தா தொகை பெறப்போவதில்லை எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

4. 22.01.2017 அன்று கோவையில் அமைந்துள்ள இல்ல கட்டிடத்தின் இரண்டாவது தளம் திறப்பு விழா, மாநில செயற்குழு, 31.01.2017 அன்று பணிஓய்வு பெறும் கோவை - பொள்ளாச்சிக் கிளையின் தலைவர் திரு. இராஜன் பிரேம்குமார் அவர்களுக்கு பாராட்டு விழா ஆகியவை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

5. சென்னை இல்லக் கட்டிடம் புதுப்பிக்கும் பணியை 2017 பிப்ரவரி முதல் வாரத்தில்ஆரம்பிப்பது எனவும் அந்த வேலையை கோவை - பொள்ளாச்சிக் கிளையின் தலைவர் திரு. இராஜன் பிரேம்குமார் அவர்கள் பொறுப்பில் விடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

ABSTRACT

Establishment - Public Works Department - Tamil Nadu Engineering Service - Promotion and posting of Superintending Engineer as Special Chief Engineers / Chief Engineers - Transfer and posting of Chief Engineer in Public Works Department - Orders - Issued.

Public Works (A1) Department

G.O.(D) No. 317 Dated: 26.11.2016

கார்த்திகை 11,

திருவள்ளுவர் ஆண்டு, 2047

Read:

1. Order of the Honb'le Madurai Bench of Madras High Court dated 08.09.2016 in W.P. (MD) No. 9316 of 2016 and W.M.P. (MD) Nos 7386 & 8510 of 2016.
2. G.O.(D) No. 316, Public Works (A1) Department, dated. 26.11.2016

-----------

**ORDER:**

The following promotion and posting of Superintending Engineer as Special Chief Engineers / Chief Engineers on regular basis in Public Works Department are ordered:-

(1) Thiru T. Arul Santhiappan Jeevendra Durai, Superintending Engineer, Ground Water Circle, Water Resources Department, Madurai is promoted and posted as Special Chief Engineer, Ground Water Circle Water Resources Department, Madurai, by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(2) Thiru R. Ilangovan, Superintending Engineer, Parambikulam Aliyar Basin Circle, Water Resources Department, Pollachi is promoted and posted as Special Chief Engineer, Parambikulam Aliyar Basin Circle, Water Resources Department, Pollachi, by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(3) Thiru K. Mohanraj, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Medical Works, Chepauk, Chennai is promoted and posted as Special Chief Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Medical Works, Chepauk, Chennai by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(4) Tmt. K. Valarmathi, Superintending Engineer / Director, Institute of Hydraulics and Hydrology, Poondi is promoted and posted as Special Chief Engineer / Director, Institute of Hydraulics and Hydrology, Poondi by upgrading the post held by her in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till she vacates the said post as she has less than one year of left over service.

(5) Thiru R. Jeyasingh, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Vellore is promoted and posted as Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai in the Existing vacancy.

(6) Thiru G. Kumaresan, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Tirunelveli is promoted and posted as Special Chief Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Tirunelveli by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(7) Thiru O. Chandramohan, Superintending Engineer, Vaippar Basin Circle, Water Resources Department, Virudhunagar is promoted and posted as Special Chief Engineer, Vaippar Basin Circle, Water Resources Department, Virudhunagar by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(8) Thiru K. Balaiya, Superintending Engineer, Designs Circle, Water Resources Department, Chennai is promoted and posted as Special Chief Engineer, Designs Circle, Water Resources Department, Chennai, by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(9) Thiru M. Palanikumar, Superintending Engineer, Public Works Department, Special Project Circle, Water Resources Department, Chennai is promoted and posted as Chief Engineer, Water Resources Department, Trichy Region, Trichy in the existing vacancy.

(10) Thiru R. Vijayaraghavan, Superintending Engineer, Public Works Department, Planning & Designs Circle (Buildings), Chennai is promoted and posted as Chief Engineer, Water Resources Department, Design Research & Construction Support, Chennai vice Thiru A. Venkatachalam, Chief Engineer, be transferred.

(11) Thiru K. Nehru, Superintending Engineer / Joint Director, Irrigation Management Training Institute, Trichy (On Deputation) is promoted and posted as Special Secretary to Government, Public Works Department, Secretariat, Chennai in the existing vacancy.

(12) Thiru K. Prabakar, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Circle, Medical Works, Madurai is promoted and posted as Chief Engineer (Buildings), Public Works Department, Trichy Region, Trichy in the existing vacancy.

(13) Thiru C. Duraisamy, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Medical Works, Trichy is promoted and posted as Chief Engineer, Technical Education Department, Chennai in the existing vacancy.

(14) Thiru P. Subbaram, Joint Chief Engineer, Office of the Chief Engineer, Public Works Department, Design Research & Construction Support, Water Resources Department, Chennai is promoted and posted as Special Chief Engineer, Office of the Chief Engineer, Public Works Department, Design Research & Construction Support, Water Resources Department, Chennai by upgrading the post held by him in the existing place from the date of assuming charges as Special Chief Engineer, till he vacates the said post as he has less than one year of left over service.

(15) Thiru C.T. Sankar, Superintending Engineer, Lower Cauvery Basin Circle, Water Resources Department, Thanjavur is promoted and posted as Chief Engineer, Water Resources Department, Madurai Region, Madurai in the existing vacancy.

(16) Thiru T. Murugusubramanian, Superintending Engineer, Periyar Vaigai Basin Circle, Water Resources Department, Madurai is promoted and posted as Chief Engineer, Water Resources Department, Chennai Region, Chennai in the existing vacancy.

(17) Thiru P. Vairavanathan, Superintending Engineer (Civil), Plan Formulation Circle, Water Resources Department, Trichy is promoted and posted as Chief Engineer, Plan Formulation, Water Resources Department, Chennai vice Thiru S. Thinakaran, Chief Engineer, be transferred.

(18) Thiru T. Asokan, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Circle, Coimbatore is promoted and posted as Chief Engineer, Operation and Maintenance, Water Resources Department, Chennai in the existing vacancy.

2. The following Transfer and Posting of Chief Engineers in Public Works Department are also ordered.

1. Thiru A. Venkatachalam, Chief Engineer, Design Research & Construction Support, Water Resources Department, Chennai is transferred and posted as Chief Engineer, Water Resources Department, Coimbatore Region, Coimbatore in the existing vacancy.

2. Thiru S. Thinakaran, Chief Engineer, Plan Formulation, Water Resources Department, Chennai is transferred and posted as Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai in the existing vacancy.

(By Order of the Governor)

S.K. Prabakar
Principal Secretary to Government

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 535 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 30.11.2016)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | T.R. கணேஷ் | உதவி செயற்பொறியாளர் (மின்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

## கிளைச் சங்க பொறுப்பாளர்களுக்கு

2017 ஆம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டி ஆகியவை கிளைச்சங்கத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிளைப் பொறுப்பாளர்கள் உறுப்பினர்களிடமிருந்து 2017 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாவை பெற்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்துடன் மையச் சங்கத்திற்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

## ABSTRACT

Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 - Prescribing format for Prior Intimation Letter to apply Passport and its renewal and format for grant/renewal of Passport for the Government Servant's dependant family members - Amendment to Rule 24-A of the Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 - Issued

## PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (A) DEPARTMENT

G.O. (Ms) No. 114

Dated 15.11.2016
துன்முகி, ஐப்பசி30,
திருவள்ளுவர் அண்டு, 2047
READ:

1. G.O. Ms. No. 117, Personnel and Administrative Reforms (A) Department, dated 13.11.2014.
2. Letter No. VI/401/01/05/2014, dated 26.05.2015, from the Joint Secretary (PSP) & Chief Passport Officer, Ministry of External Affairs, CPV Division, Government of India, New Delhi.
3. G.O. Ms. No. 71, Personnel and Administrative Reforms (A) Department, dated 02.07.2015.

**ORDER:**

In the Government Order first read above, amendments were issued to Rule 24-A of the Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 by prescribing a form for issue of an "Identity Certificate and No Objection Certificate to apply for grant / renewal of Passport"

2. In the letter second read above, the Ministry of External Affairs, Government of India have introduced a "Prior Intimation Letter" to be submitted by the Government Servants for grant/renewal of Passport and also prescribed the form to be submitted by the Government Servants for grant/renewal of Passport for their dependent family members.

3. Based on the above letter, orders were issued in the Government order third read above by introducing an additional form termed as "Prior Intimation Letter" to be submitted by the Government Servants for grant/renewal of Passport.

4. Based on the Letter second read above and the Government order third read above, the following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

## NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Government Servants Conduct Rules, 1973.

## AMENDMENTS.

In the said Rules, -

(1) for Rules 24-A, excluding the provisos thereunder, the following rule shall be substituted, namely:-

"24-A. Obtaining of Identify Certificate before applying for Passport and No Objection Certificate for undertaking foreign trip.- No Government servant shall, except after giving prior intimation or after obtaining Identity Certificate and No Objection Certificate from the Government, apply for grant or renewal of Passport and shall, except after obtaining No Objection Certificate from the Government, undertake trip to foreign country. Application for such Identity Certificate or No Objection Certificate shall be submitted in Form I in Schedule III appended to these Rules. Prior Intimation Letter shall be submitted in form II in schedule III appended to these Rules and the Identity Certificate and No Objection Certificate to apply for grant or renewal of Passport and No Objection Certificate to apply undertake foreign trip shall be issued in Forms III and IV respectively, in the said Schedule. While applying for such No Objection Certificate, information regarding the purpose of the visit, the duration of stay, and the names of countries proposed to be visited shall be furnished. The spouse of the Government Servant and dependent children upto the age of 18 years shall have an option to obtain Identity Certificate for expeditious issue of Passport. In such case, the Government Servant shall submit the required particulars in Form-V in schedule-III appended to these Rules".

(2) in Schedule-III,-

(a) in Form-I,-

(i) after the entry in serial No. 17, the following entry shall be inserted, Namely:-

"18. Whether executed an affidavit in proper format on appropriate non-judicial stamp paper of minimum value and attested by a Notary Public in case of spouse and dependent children up to the age of 18 years of the Government Servant requiring Identity Certificate";

(ii) serial number 18 shall be renumbered as serial number19;

(b) after form-I as so amended, the following Form shall be inserted, namely:-

**"FORM-II**

Place................

Date.................

**Prior Intimation Letter**

From

Name and Address of the Government Servant

To

Designation and Address of the Authority Concerned

Subject: Prior Intimation for submission of Passport application

Sir/Madam,

I hereby give prior intimation that I am applying for an ordinary Passport to Regional Passport Office.........................................

2. This is for your kind information and record.

Yours Faithfully,

Signature:

Name:

Date of Birth:

Designation:

Name of Office where working:

Address of Present Office:

Residential Address:";

(c) Form-II and Form-III shall respectively, be renumbered as Form-III and Form-IV;

(d) after Form-IV as so renumbered, the following Form shall added, namely:-

**"FORM-V**

(To be executed on appropriate non-judicial stamp paper of minimum value and attested by a Notary Public)

(One original and one self-attested photocopy to be submitted)

I,............................(name), son/daughter/wife/husband of Thiru/ Tmt........................ residing at ...................... Date of Birth ......................... being an applicant for issue of passport, do hereby solemnly affirm and state the following:

1. The names of my parents and spouse are as following;

(i) Father :

(ii) Mother :

(iii) wife/Husband :

2. That I am a continuous resident at the above mentioned address from...................

3. That I am a citizen of India by birth/descent/registration / naturalization and that I have neither acquired the citizenship of another country nor have surrendered nor been terminated / deprived of my citizenship of India.

4. That I have not, at any time during the period of five years immediately preceding the date of this affidavit, been convicted by any court in India for any offence involving moral turpitude, nor sentenced in respect thereof to imprisonment for not less than two years.

5. That no proceedings in respect of any criminal offence alleged to have been committed by me are pending before any criminal court in India.

6. That no warrant or summons for my appearance, and no warrant for my arrest, has been issued by a court under any law for the time being in force, and that my departure from India has not been prohibited by order of any such court.

7. That I have never been repatriated from abroad back to India at the expense of Government of India / I was repatriated from abroad back to India at the expense of Government of India, but reimbursed expenditure incurred in connection with such repatriation.

8. That I will not engage in activities prejudicial to the sovereignty and integrity of India.

9. That my departure from India will not be detrimental to the security of India.

10. That my presence outside India will not prejudice the friendly relations of India with any foreign country.

Place.................

Date...................

DEPONENT

**VERIFICATION**

Verified on .......... (date) at ............. (Place) that the contents of the above mentioned affidavit are ture and correct and nothing material has been concealed.

DEPONENT.".

(BY ORDER OF THE GOVERNOR)

S. SWARNA

SECRETARY TO GOVERNMENT

## தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை

அனுப்புநர்
பொறி. வீ. பாலசுப்ரமணி, பி.இ. (ஹானர்ஸ்), எம்.இ (கட்டமைப்பு)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), (கூ.பொ)
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

பெறுநர்
அரசு முதன்மை செயலர்
பொதுப்பணித்துறை,
தலைமை செயலகம்,
சென்னை - 600 009.

**கடித எண்.எஸ். 10(2)/33337/2016/நாள். 26.10.2016**

அய்யா,

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - த.நா.பொ.ப.தொகுதி - பொறியாளர்கள் பகுதி நேர முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றமைக்காக - ஊதிய உயர்வு வழங்கிடுவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள அரசின் தெளிவுரை பெற்றுத் தர வேண்டல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசு கடித எண் 34124/(ஊதியக்குழு) /2009-1/ நாள். 26.06.2009
2. அரசு கடித எண். 12707/பி2/2016-2/நாள். 26.09.2016

பார்வையில் இரண்டில் காணும் அரசு கடிதத்தில் பொறியாளர்களுக்கான பகுதிநேர பொறியியல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றமைக்கான ஊதிய உயர்வு வழங்கிடுவது தொடர்பாக வழங்கப்பட்ட தெளிவுரையில் அரசு கடித எண். 10577/டி2/2012-20, பொதுப்பணித்துறை நாள் 19.03.2014 ன் படி (அனைத்து வகையான அரசுப் பணியாளர்களுக்கான ஊதியத்தினை) தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2009-ல் 01.01.2006 முதல் திருத்தியமைத்ததன் வாயிலாக செயல்படுத்தப்பட்ட ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் படி வெளியிடப்பட்ட அரசாணை எண். 234, நிதி (ஊதியக்குழு) துறை நாள் 01.06.2009 -ல் எம்.இ/பி.எச்.டி போன்ற கல்வித் தகுதிகளை பயின்று தேர்ச்சி பெற்றிருப்போருக்கான ஊதிய உயர்வு வழங்கிட அது போன்று அவ்வூதியக்குழுவின் விதிகளில் ஏதும் குறிப்பிடப்படவில்லை என முன்னர் ஏற்கனவே தெரிவித்துள்ளதையே மீள தெரிவித்துள்ளதால் கீழ்க்காணும் விவரங்கள் தொடர்பாக அரசின் தெளிவுரை பெற்று வழங்குமாறு கோரப்படுகிறது.

தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 2009 ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி திருத்தியமைக்கப்பட்ட ஊதியமானது அரசுப் பணியாளர்களுக்கு 01.01.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட அரசாணை எண்.234 நிதி (ஊதியக்குழு) துறை நாள். 01.06.2009-னைத் தொடர்ந்து முந்தைய ஊதிய விகிதத்தில்

செயல்படுத்தப்பட்டு வந்த ஊதிய உயர்வு வகையறாக்களான (ஊக்க ஊதிய உயர்வு / முன் ஊதிய உயர்வுதனை) உயர் கல்வித் தகுதிகளை தேர்ச்சி பெற்றோருக்கான ஊதிய உயர்வுகளை 01.06.2009 முதல் வெளியிடப்பட்ட திருத்திய ஊதிய விகிதமான 2009 ஊதிய விகிதத்தில் வழங்கிட பார்வை ஒன்றில் காணும் அரசு கடிதத்தில் வரிசை எண். 5ல் அதற்கான தெளிவுரையாக ஊக்க ஊதிய உயர்வு மற்றும் முன் ஊதிய உயர்வு ஏற்றுக் கொள்ளப்படலாம் என தெரிவித்துள்ளதால், அவ்வாறு தெளிவுரை வெளியிடப்பட்டதன் பேரில் முன் ஊதிய உயர்வு / ஊக்க ஊதிய உயர்வு (பொறியியல் பகுதி நேர முதுகலைப்பட்டப்படிப்பு பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றோருக்கான ஊதிய உயர்வினை) வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளலாமா என்பதற்கு அரசின் தெளிவுரை பெற்று வழங்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு - பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள

அரசு கடித நகல்

ஒம்./. வீ. பாலசுப்ரமணி,
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொபது கூ.பொ

நகல் அனைத்து தலைமைப்பொறியாளர்கள், நீ.ஆ.து, பொபது மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் அவர்களுக்கும் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) & தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் பொ.ப.து., அலுவலகம், சேப்பாக்கம், சென்னை - 5.

மேற்குறிப்பாணை எண். நி1(2) / 29924 / 2016 / சிஆர் 1 வரு / நாள். 08.11.2016

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து,., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கடித எண்.எஸ். 10(2) / 33337 / 2016 / நாள்: 26.10.2016-ன் நகல் இத்துடன் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு: கடித நகல்.

தி. காந்திமதிநாதன்,
முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் (கூ/பொ)

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொ.ப.து - ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களில் மீதமுள்ளவர்களை பணிவரன்முறை செய்யக் கோருதல் - சம்பந்தமாக.

பார்வை: முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் 2(2)/84462/07-7/நாள் 24.11.2008.

1997 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப் பொறியாளர்/இளம் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளார்கள்.

பார்வையில் கண்டுள்ள ஆணையின்படி 2008 ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 29 பேர் மட்டும் பணிவரன்முறை செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட 29 உதவிப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

---

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), (கூ.பொ)
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொ.ப.து - பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு வழங்குவது - சம்பந்தமாக.

பார்வை: 1. அரசு ஆணை எண் 334/பொ.ப. (சி2) துறை நாள். 19.10.2007

2. அரசு ஆணை எண் 134 / பொ.ப. (சி2) துறை நாள். 07.05.2010
3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் 4(2)/27376/2013/நாள் 21.12.2015.

4. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் 4(2)/27376/ 2013/நாள் 31.12.2015.
5. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் 4(2)/27376/ 2013/நாள் 19.05.2016.

பொதுப்பணித்துறையில் தினக் கூலி பணியாளர்கள் பார்வை 1 மற்றும் 2 ல் கண்ட அரசாணைகள் மூலம் பணிவரன்முறை செய்யப்பட்டார்கள்.

அவர்களில் பட்டயம் படித்த 23 பணிஆய்வாளர்களுக்கு பார்வை 3 ல் கண்ட முதன்மைத் தலைமைப் பொறியாளரின் செயல்முறை ஆணை மூலம் தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

பின்பு பார்வை 4ல் கண்ட முதன்மைத் தலைமைப் பொறியாளரின் செயல்முறை ஆணை மூலம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பின்பு பார்வை 5ல் கண்ட முதன்மைத் தலைமைப் பொறியாளரின் செயல்முறை ஆணை மூலம் பார்வை 3ல் கண்ட ஆணை ரத்து செய்யப்பட்டது.

பின்னர் இது குறித்து அரசிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அரசு பதவி உயர்வு வழங்கலாம் என்று தெளிவுரை வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது.

இதற்கிடையில் ஏற்கெனவே 23 நபர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு வழங்கியது முதுநிலைப்படி வழங்கப்படவில்லை என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

தங்களைவிட இளையவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு விட்டதாக சங்கத்திற்கு புகார் கடிதங்கள் வந்துள்ளது.

பார்வை 1 மற்றும் 2 அரசாணைகளில் பணிவரன்முறை செய்யப்பட்டு பட்டயம் முடித்தவர்களுக்கு வரிசைப்படி, முதுநிலைப்படி முதலில் உள்ளவர்களுக்கு விதிகளின்படி தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களில் தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு வேண்டாம் என்று மறுப்பு தெரிவிப்பவர்களுக்கு பதிலாக முதுநிலையில் அடுத்துள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். இதனால் தவறுகள் நடக்காது. மீண்டும் சர்ச்சைகள் உருவாகாது.

தனி நபர்களிடம் தொழில்நுட்ப உதவியாளர்/வரைதொழில் அலுவலர் இரண்டு பதவிகளில் எந்த பதவிக்கு செல்ல விருப்பம் என விருப்பக்கடிதம் ஏற்கெனவே பெற்றதில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளது.

எனவே மேற்கண்ட முறையில் முதுநிலைப்படி, விதிகளின்படி உண்மையிலேயே தகுதியுள்ளவர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

# பொறியாளர் நவம்பர் 2016 மாத இதழில் இருந்து

**Proceeding of the General Body Meeting of Association of Engineers & Assistant Engineers Association held in Chennai on 22.10.2016**

2. Publication of Classified List of A.E's by Implementing Judgements of Hon'ble High Court - Present status and follow action.

3. Resolved to request the Government to withdraw the G.O. ms. No.1. PWD, dt. 02.01.1990.

6. Resolved to request the Engineer-in-Chief (General) to published the draft classified list for 2007, 2009, 2011, 2011, and 2015 Assistant Engineers based on the judgement of Hon'ble High Court.

9. Resolved to request the Government to recruit only Graduate Engineers at Section Level through TNPSC to meet the challenges ahead and make use of their technical knowhow in all the developmental Projects.

12. Resolved to request the Government to withdraw the G.O. Ms. No.1. PWD, dt. 02.01.1990 and to implement the judgment on G.O. Ms. No. 66, PWD dt. 12.03.2007 which are detrimental to the Graduate Engineers of TNPWD.

**(22.10.2016 அன்று சென்னை, பெசன்ட்நகர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சமுதாய கூடத்தில் நடைபெறும் பொறியாளர் சங்க பொதுக்குழுவில் அளிக்கப்பட்ட பொதுச்செயலாளரின் ஆண்டறிக்கை 01.10.2015 முதல் 20.10.2016 முடிய)**

அரசாணை எண். 66, பொதுப்பணித்துறை, நாள் 12.03.2007.

* அரசாணை நிலை எண். 66 க்கு எதிரான வழக்கில் உயர்நீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் உதவி பொறியாளர்களுக்கான முதுநிலைப்பட்டியல் தயார் செய்ய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கடித எண்.எஸ். 2(2)/59620/2015 நாள். 19.02.2016 அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் சுற்றுக்கு வெளியிடப்பட்டு முறையே பிற தலைமைப் பொறியாளர்களும் சரிபார்த்து தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்துக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து சங்கத்தின் சார்பில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களை முதுநிலைப் பட்டியலை வலியுறுத்தப்பட்டது. ஆனால் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களுக்கு மேற்கண்ட பட்டியலை இறுதி செய்வதில் சில சந்தேகங்கள் எழுந்து அரசிடம் அது சம்பந்தமாக சில விளக்கங்கள் கோரியுள்ளார்கள்.

* இதற்கிடையில் நமது சகோதர சங்கம் அரசாணை நிலை எண். 66, எதிரான நாம் பெற்ற தீர்ப்புக்கு எதிராக தடை கேட்டு உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு வழக்கு பதிவு செய்தது (SLP (c) No. 7064-7066/2016) இவ்வழக்கானது 23.09.2016 மற்றும் 04.10.2016 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு வந்தது. விசாரணையில் நமது சகோதர சங்கத்தின் வழக்குரைஞர்கள் நாம் பெற்ற தீர்ப்பிற்கு தடை கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு நீதியரசர் தடை வழங்க மறுத்து தமிழக அரசினையும் ஓர் எதிர்மனுதாரராக சேர்க்கும்படி ஆணையிட்டு வழக்கை ஒத்தி வைத்துள்ளார்கள். வழக்கில் கூடிய விரைவில் தீர்ப்பு பெற்று மேற்கண்ட பட்டியலை விரைந்து பெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது.

அரசாணை எண்.1

G.O. Ms. No. 1, அடிப்படையில் JDO, DO, Overseer மற்றும் Technical Assistant முதலியோர்களுக்கு அளிக்கப்படும் பதவி உயர்வுகளை எதிர்த்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மேலும் மேற்கண்ட அரசாணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது (வழக்கு எண். 36614/2016)

மகளிர் தினம்

மகளிர் தின விழா கூட்டம் கடந்த 08.03.2016 அன்று சென்னையில் நமது சங்கத்தில் 70க்கும் மேற்பட்ட பெண் பொறியாளர்களால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தலைமைப் பொறியாளர் பொறிஞர் B. இராஜேஸ்வரி, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, **பொறிஞர் B. விமலா, இணைத் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை** மற்றும் பொறிஞர் K.R. குமாரி ஷீலா, துணை கண்காணிப்புப் பொறியாளர், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சென்னை ஆகியோர்கள் தலைமை தாங்கினார்கள்.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.எஸ்.சாந்தி உதவிப் பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்திற்காக ரூ.2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.சுப்பையன் உதவிச்செயற்பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்திற்காக ரூ.3000/- (மூன்று ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் கே.பண்பு இளநிலைப் பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்திற்காக ரூ.1000/- ( ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

## இயங்கும் உலகம்

### கோவை-பொள்ளாச்சி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கோவை-பொள்ளாச்சி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் கோவையில் உள்ள பொறியியல் சங்க கட்டிடமான இரா. பழனிச்சாமி இல்லத்தில் 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. கிளை தலைவர் பொறி. S. பொன்னுசுவாமி அவர்கள் தலைமை ஏற்றார். உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாநில பொதுச்செயலாளர் D. முருகேசன், மாநில துணைத்தலைவர் S. பாஸ்கரன் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் C. பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளை தலைவர் பொறி. S. பொன்னுசுவாமி அவர்கள் தலைமை உரையாற்றினார். கிளை செயல்பாடுகள பற்றி கிளைச் செயலர் S. இராஜன்பிரேம்குமார் அவர்கள் உரையாற்றினார். மேற்கு மண்டல செயலாளர் C. பன்னீர் செல்வம் அவர்களின் உரைக்குப்பின் மாநில துணைத்தலைவர் S. பாஸ்கரன் அவர்கள் சங்க செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். அதன் பின் மாநில பொதுச்செயலாளர் D. முருகேசன் அவர்கள் மையச் சங்க செயல்பாடுகளான இளம் பொறியாளர் பணிவரன், பணி நீக்கம் செய்யப்பட்ட இளம் பொறியாளர் பிழை பொறுத்தல் கோப்பின் தற்போலைய நிலை, மின் பொறியாளர் பதவி உயர்வு, பணி ஆய்வாளர்களுக்கு பட்டயம் தேர்ச்சி பெற்றிருப்பின் தொழில்நுட்ப உதவியாளர்/வரைவாளர் பதவி உயர்வு மற்றும் சென்னை தமிழ்நாடு பொறியியல் சங்க இல்ல கட்டிடம் நவீனப்படுத்துதல் சம்பந்தமாக விரிவாக பேசினார். கிளை இணைச்செயலாளர்கள் பொறி. G. பௌள்ளிராஜ், பொறி. G. விஜயசேகர் மற்றும் உறுப்பினர்கள் பொறி K. ராதாகிருஷ்னன் ஆகியோர் சந்தேகங்களுக்கு மாநில பொதுச்செயலாளர் அவர்கள் தெளிவான விளக்கம் அளித்தார்.

கிளை பொருளாளர் K.N. ரஞ்சன் அவர்கள் கிளை வரவு, செலவு கணக்குகளை அவைக்கு சமர்ப்பித்தும், வாசித்தும் ஒப்புதல் பெற்றார். அதனை தொடர்ந்து 2016-2017 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி S. ராஜன்பிரேம்குமார் |
| உபத்தலைவர் | : | பொறி P. பாலன் |
| செயலாளர் | : | பொறி K.N. ரஞ்சன் |
| இணைச்செயலாளர் 1 | : | பொறி G. விஜயசேகர் |
| இணைச்செயலாளர் 1 | : | பொறி G. பௌள்ளிராஜ் |
| பொருளாளர் | : | பொறி K. மோகன்ராஜ் |

புதிய பொறுப்பாளர்களுக்கு மாநில பொதுச்செயலாளர் அவர்கள் உறுதிமொழி செய்து வைத்தார்.

இறுதியாக கிளை இணைச்செயலாளர் பொறி. G. பெள்ளிராஜ் அவர்கள் நன்றி கூற நாட்டு பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. உதவி செயற்பொறியாளர் காலி பணியிடங்கள் வருடம் தோறும் ஒப்புதல் பெற (Estimate of Vacancy) இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

2. கிளையின் வங்கி சேமிப்பு கணக்கினை புதிய பொருளாளர் மற்றும் செயலாளர் கூட்டாக இயக்க இக்கிளையின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

3. பணி ஆய்வாளர்களாக பணிபுரியும் நமது சங்க உறுப்பினர்களுக்கு விரைந்து இளநிலை வரைதொழில் அலுவலர் (JDO) அல்லது தொழில்நுட்ப உதவியாளராக பதவி உயர்வு பெற்றுத்தர மைய சங்கத்தை கிளையின் தீர்மானம் மூலம் கேட்டுக் கொள்கிறது.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் சி.கிருஷ்ணன், பணிஆய்வாளர் அவர்களது தாயார் திருமதி C. காளியம்மாள் அவர்கள் 26.10.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் கே.நாகராஜன் இளம்பொறியாளர் அவர்களது தகப்பனார் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் 16.11.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் உறுப்பினர் பொறியாளர் டி. செல்லையா உதவிப் பொறியாளர் அவர்களின் தகப்பனார் திரு. தமவீரக்கோனார் அவர்கள் 01.09.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் முன்னாள் உறுப்பினர் பொறியாளர் பி.நரசிம்மன் இளம் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 26.11.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளையின் உறுப்பினர் பொறியாளர் ஆர்.பழனிச்சாம் இளம் பொறியாளர் அவர்கள் 10.11.2016 அன்று இயற்கை எய்தினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரார்த்திக்கிறது.

**Sri Karkuvelayyanar Thunai**

# *Wedding Invitation*

**Mr. P. Muthusamy D.C.E.,**

(Junior Engineer, PWD)

&

**Mrs.M. Gomathi**

***Cordially solicit your presence and blessing with family on the auspicious occasion of the wedding of our daughter***

**Sow: M. Shunmugavidya M.E.,**

with

**Chi: V.B. Mariappan B.E., MBA.,**

(Team Lead, Anjana Software Solution (P) Ltd, Chennai)

S/o Mrs & Mr. A.V. Baskaran, Kayalpattinam.

**on Monday 5 th December 2016**

**at SUBAM MARRIAGE HALL,**

(Naranammalpuram Town panchayat) Talaiyuthu, Sankarnagar - 627 357

**Muhurtham: Between 9.00 a.m. to 10.30 a.m. Mahara Lagnam**

***With best compliments from: M. Paramasivan D.A.E.,***

(Sales consultant, ABI Motors, Swaraj Tractor - Tirunelveli)



MUTHUSAMY .P
Junior Engineer, PWD
Ex. Zonal Secretary / TNEA
No.4/27, Vanchi Nagar, Sankar Nagar,
Thirunelveli - 627 357.
Cell: 94860 47215.

Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2015-17 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

DECEMBER 2016

# மாநிலச் செயற்குழுக் கூட்டம்

நாள் : 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பொறியாளர் R. பழனிச்சாமி இல்லம்,
கோயம்புத்தூர்.

I. இல்லக் கட்டிடம் இரண்டாவது தளம் திறப்பு விழா

ii. கோவை - பொள்ளாச்சி கிளைத்தலைவருக்கு பணிஓய்வு பாராட்டு விழா,

iii. மாநில செயற்குழுக் கூட்டம்

பொறியாளர் சகோதர, சகோதரிகளும், சிறப்பு அழைப்பாளர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

பொறியாளர். எஸ். கண்ணன்
செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்

தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
10-12-2016

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312